*1972 ஆகஸ்ட் 25]*

### *நகர்ப்புறச் சொத்தின் மீது உச்சவரம்பு*

**திரு. ஜி. சுவாமிநாதன்,**

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகர்ப்புறச் சொத்தின் மீது உச்சவரம்பு விதிப்பது குறித்து ஆய்வு செய்ய அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், குழுவின் முக்கியமான பரிவுரைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இக்குழுவின் பரிவுரைகள் அரசின் ஆய்வில் உள்ளன; குழுவின் பரிவுரைகளே இந்த நிலையில் வெளியிடுவது பொது நலனுக்கு ஏற்றதல்ல.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வருவதை அனுமதிக்கப் போகிறதா அல்லது மாநில அரசு கொண்டு வரப் போகிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மத்திய அரசு இன்னும் முடிவு செய்யவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இது சம்பந்தமாக மத்திய அரசு தன் கருத்துக்களை அனுப்பியுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மத்திய அரசு சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது. இதுபற்றி ஆராய அரசு ஒரு குழு அமைத்து அவைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, விளக்கம் கொடுக்காமல் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னல், பயனில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது தான் பொருள். மேலும் விவரங்கள் தருவது பொது நலனுக்கு ஏற்றதல்ல என்று கருதுகிறேன்.

### *Industrial Licences*

* 260 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the industrial licences issued for Tamil Nadu by the Central Government during 1971–72?

### தொழில் உரிமங்கள்

*திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*1971-72-ல் மத்திய அரசு, தமிழ் நாட்டிற்கு வழங்கியுள்ள தொழில் உரிமங்கள் பற்றிய விவரங்கள் யாவை ?*

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1971-72-ஆம் ஆண்டில், 53 தொழில் உரிமங்கள் மத்திய அரசால் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன.*

THIRU M. RAJAH IYER : May I know how this number was in the previous years?

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1967-ல் 17, 1971-ல் 53.*

### *Cauvery Waters issue*

* 261 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether a three-member Official Committee has been constituted to collect all relevant data relating to the Cauvery Waters issue; and

(*b*) if so, the details thereof?

### காவிரி நீர்த் தகராறு

*திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) காவிரி நீர்த் தகராறு தொடர்பான பொருத்தமான புள்ளிவிவரங் களைத் திரட்டுவதற்கு மூவரடங்கிய அதிகாரிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள் ளதா ?*

*(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.*

*(இ) இது குறித்த விவரங்கள் அடங்கிய இந்திய அரசின் தீர்மானங் களின் நகல் @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன.*

---

@ 377-378ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.